## கனடா தினம் அன்று பட்டாசுகளை பாதுகாப்புடன் உபயோகியுங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 25, 2021) – கனடா தினம் அன்று பட்டாசுகளை உபயோகிக்கும்போது பாதுகாப்பாக இருப்பதின் முக்கியத்துவத்தை நகரவாசிகளுக்கு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நினைவூட்டுகிறது.

குடியிருப்புவாசிகள், தங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் வெளியில் ஒன்றாகக் கூடுவதாக முடிவுசெய்தால், உடல்நலம் மற்றும் பாதுகாப்பை மனதில் வைத்திருக்குமாறு தயவுகூர்ந்து கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஜூன் 30 புதன்கிழமை காலை 12:01 மணிக்கு நகரை மீண்டும் திறக்க மாகாணத் திட்டவரைபடத்தின் இரண்டாம் படியில் ப்ராம்ப்ட்டன் நகரம் நுழைகிறது. இரண்டாம் படியின் கீழாக, திறந்த வெளியில் கூடும் சமூகக் கூட்டங்களில் 25 பேர் மட்டுமே இருக்கலாம். கட்டிடங்களுக்கு உள்ளாக கூடும் கூட்டத்தில் வெவ்வேறு வீடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உட்பட ஐந்து பேருக்கு மட்டுமே அனுமதி. உங்கள் அன்புக்குரியவர்களையும் சமூகத்தையும் பாதுகாப்பாக வைத்திருங்கள். நல்ல சுகாதாரம், மற்றும் உடல் ரீதியான சமூகவிலகலைப் பேணவும்; மற்றும் இதைச்செய்வது கடினமாக இருக்கும்போது முகக் கவசம் அணியவும்.

**பட்டாசுகளில் பாதுகாப்பு**

ப்ராம்ப்ட்டனில் உள்ள தனியார் கட்டிடங்களில் உரிமம் ஏதும் பெறாமலேயே குறுகிய தூரமே செல்லும் பட்டாசுகள் அனுமதிக்கப்படுகின்ற வருடத்தின் நான்கு முக்கியமான நாட்களில் கனடா தினமும் ஒன்றாகும். உப சட்டத்தின் கீழாக, விக்டோரியா தினம், தீபாவளி மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களிலும் பட்டாசுகள் கொளுத்த அனுமதிக்கப்படுகின்றன.

குறுகிய தூர பட்டாசு என்பது மூன்று மீட்டர் (10 அடி) க்கும் குறைவாக பயணித்து வெடிக்கின்ற பட்டாசுகள் (எ.கா. புஸ்வாணங்கள், சங்கு சக்கரங்கள், தரைச்சக்கரங்கள், மத்தாப்புக்கள் ஆகியவை) ஆகும். இது ஏறக்குறைய ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்தின் உயரம் அல்லது கூடைப்பந்து வளையத்தின் உயரம் ஆகும்.

மற்ற அனைத்து வகை ராக்கெட் பட்டாசுகளும் ப்ராம்ப்ட்டனில் தடை செய்யப்பட்டுள்ளன. தெருக்கள், நடைபாதைகள், நகரின் பூங்காக்களுக்குள் அல்லது நகராட்சி அல்லது பள்ளி கட்டிடங்களில் பட்டாசுகள் வெடிக்க அனுமதிக்கப்படாது என்பது நகர குடியிருப்பாளர்களுக்கு நினைவூட்டப்படுகிறது.

தனியார் கட்டிடங்களில் குறுகிய தூரம் செல்லும் பட்டாசுகளை உபயோகிக்கும்போது, குடியிருப்புவாசிகள் பின்வரும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளை பின்பற்ற வேண்டும்:

- பட்டாசுகளை அணைப்பதற்காக ஒரு பாத்திரம் நிறைய தண்ணீர் அல்லது தண்ணீர் வரும் குழாயை அருகில் வைத்திருக்க வேண்டும்.

- மத்தாப்பு தவிர, எந்த பட்டாசுகளையும் ஒருபோதும் கையில் பிடித்தபடியோ பற்ற வைக்கவோ வேண்டாம்.
- பட்டாசுகளை ஒருபோதும் மற்றவர்களை நோக்கி காட்டவோ வீசவோ வேண்டாம்.
- மத்தாப்புக்களை உபயோகித்த பின்னர், அவற்றை அப்புறப்படுத்துவதற்கு முன்பாக குளிர்ந்த நீர் உள்ள பாத்திரத்தில் இடவும்.
- அனைத்து பட்டாசுகளையும் அப்புறப்படுத்தும் முன்னால் முழுக்கவும் குளிர வைக்கவும்.

தற்போது ப்ராம்ப்ட்டன் நகரில் பதிவு செய்துகொண்ட பட்டாசு சில்லறை விற்பனையாளர்கள் இல்லை. உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து மட்டுமே பட்டாசுகளை வாங்க நாங்கள் பரிந்துரைக்கிறோம்.
பட்டாசுகளின் பாதுகாப்பு மற்றும் உபசட்டங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/fireworks.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம்7 சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca